

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு முன்னாள் அமைச்சர்,கழக சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம். மைதீன் கான் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து இனிப்பு வழங்கியும்,நலத்திட்ட உதவிகளாக தையல் மிஷின் 20 பேருக்கு, ஆட்டோ ஓட்டநர் 303 பேருக்கு சீருடை, கழக உடன்பிறப்புகள் 103 பேருக்கு வேஷ்டி, கைலி, சட்டை, வழங்கப்பட்டது. நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ. எல்.எஸ்.லெட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன், மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் முகமது மீரான் மைதீன், மிக்கேல்,மாவட்ட மாணவரணி அமைப்பு கல்லூர் பாலா,முன்னாள் பொருளாளர் அருண்குமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி சித்தூர் பஸ் நிலையத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம்.கதிர்ஆனந்த் எம்.பி. உணவு வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் சி. நரசிம்மன் மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா, மண்டல குழு தலைவர் புஷ்பலதா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டிடாசரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளையொட்டி—ரூ.7.5 லட்சம் மதிப்பில்

# 500 தூய்மைப் பணியாளர்களுக்கு சமையல் பொருள்கள்!

## மின்கழக தொ.மு.ச. சார்பில் பொதுச் செயலாளர் பா.மணிமாறன் வழங்கினார்!

சென்னை, ஜூன் 5 -

மின்வாரிய பணியாளர்களுக்கு பல சலுகைகள், பணப்பயன்கள் வாரி வழங்கிய வள்ளல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி மின்கழகத் தொமுசவினர் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். 500 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு ரூ.7.5 லட்சம் மதிப்பில் சமையல் பொருள்கள் வழங்கப்பட்டன.

இது குறித்து மின்கழகத் தொ.மு.ச பொதுச்செயலாளர் / தொமுச பேரவை இணைப்பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறி க்கை வருமாறு :-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா, மின்கழகத் தொமுசவினர் நலத் திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிகிறவர்களுக்கு பல சலுகைகள், பணப்பயன்கள் வாரி வழங்கிய வள்ளல், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா. தமிழ்நாடு முழுவதும் உள்ள திட்ட / கோட்டச் சங்கங்களில் பேரவை கொடியினை ஏற்றி இனிப்புகள் / நலத் திட்ட உதவிகள் வழங்கி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் சிறப்பாக கொண்டாடினார்கள்.

சென்னை அண்ணாசாலையில் உள்ள தமிழ்நாடு மின்வாரியத் தலைமை அலுவலகத்தின் முன்பு பேரவை கொடியினை ஏற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அலங்கரிக்கப்பட்ட திருவுருவ படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சங்க பொதுச்செயலாளர் பா.மணிமாறன் இனிப்புகளை வழங்கினார்.

அதன்பிறகு, தமிழ்நாடு மின்கழகத் தொமுச தலைமைச்சங்க அலுவலகத்தில் தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் உள்ள தூய்மை பணியாளர்கள், காவல் பணியாளர்கள், பொது மக்கள் என 500 நபர்களுக்கு ரூ.1500/ மதிப்புள்ள சமையலுக்கு தேவையான தரமான அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு பைகளில் நல உதவிகள் வழங்கினார்கள்.

அங்கு கூடியிருந்த தொழிலாளர்கள் / பொதுமக்கள் மத்தியில் சங்க பொதுச்செயலாளர் (பா.மணிமாறன்) பேசினார்,

அவர் பேசியது வருமாறு:-

தமிழ்நாட்டின் 5 முறை முதலமைச்சராக பொறுப்பு வகித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு பல சலுகைகள், பணப்பயன்கள் வழங்கினார்கள்.

• 01.12.1969 முதல் மின்வாரிய தொழிலாளர்களுக்கு முதன்முதலில் ஊதிய உயர்வு 27.05.1970ல் வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

• தமிழ்நாட்டில் அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம் செல்ல மின்வழித்தடம் அமைத்தார்.

• மே 1 தொழிலாளர் தினம் சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறையாக அறிவித்தார்.

• பணியிலிருக்கும் பணியாளர்களுக்கு செய்த சாதனை மட்டும் இல்லாமல், பணியாளர் இறந்தால், அவர்களது இறுதி சடங்குகளுக்காக, குடும்ப பாதுகாப்பு நிதியை ஏற்படுத்தி அவர்களது குடும்பத்தா ருக்கு வழங்க உத்தரவு பிறப்பித்தவர் கலைஞர் அவர்கள். (இது எந்தொரு தொழிற்சங்கமும் வைக்காத கோரிக்கை)

• 01.12.1988 முதல் மின்வாரிய பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு 31.07.1989 வழங்கினார்கள்.

• விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினார். உச்சநீதிமன்றத் தீர்ப்பின் படி சுமார் 18000 ஒப்பந்த தொழிலாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட்டனர்.

• 01.12.1996ம் ஆண்டு ஊதிய உயர்வில் மத்திய அரசு ஊழியர்கள் பெற்று வந்த 40 ரூ சதவிகிதம் 08.07.1998 அன்று மின்வாரிய தொழிலாளர்களுக்கும் வழங்கினார்கள்.

மேலும்,

• 7 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 1 ஆண்டுயர்வு

• 17 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 2 ஆண்டுயர்வு

• 27 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 3 ஆண்டுயர்வு

• 37 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 4 ஆண்டுயர்வு என வழங்கி மின்வாரியத்தில் பணிபுரிகிறவர்களை மகிழ்ச்சியடைய செய்தார்.

• 7 புதிய மின்உற்பத்தி நிலையங்கள் மேட்டூர், வல்லூர், எண்ணூர் துவக்கி னார்.

• 01.08.2006 ல் மின்வாரிய தொழிலாளர்களுக்கு 50 ரூ சதவிகிதம் அகவிலைப்படியை அடிப்படை ஊதியத்துடன் இணைத்து இன்னொரு ஊதிய உயர்வு போல மின்வாரியத்தி னருக்கு வழங்கினார்.

• 30.06.2007ல் வாரியம் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதை முன்னிட்டு அனைத்து தொழிலா ளர்களுக்கு ஒரு ஆண்டு உயர்வு மற்றும் ரூ.1000 சன்மானம் வழங்கினார்கள். மேலும், ஓய்வு பெற்றவர்களுக்கு ரூ.1000 சன்மானம் வழங்கினார் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ரூ.500/ சன்மானம் வழங்கினார்.

• 2010-2011 - ஒரே ஆண்டில் 77,158 இலவச வேளாண் மின் இணைப்புகளை வழங்கி சாதனைப்படைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

• 01.12.2007ம் ஆண்டு மீண்டும் 40 ரூ ஊதிய உயர்வை மின்வாரிய பணியாளர்களும் 18.11.2009ல் வழங்கினார்கள்.

• அதிமுக அரசால் 5 ஆண்டுக்கு என உயர்த்திய ஒப்பந்த காலம் மீண்டும் 4 ஆண்டுகள் என்று குறைத்து ஆணை பிறப்பித்தார்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

• ஆண்டுயர்வு 3 சதவிகிதமாக, அரசு ஊழியர்களுக்கு வழங்கியது போல வழங்கப்பட்டது.

• நிலுவைத்தொகை 01.12.2007 முதலே வழங்கப்பட்டது.

• மின் பகிர்மான வட்டங்களில் / அனல்மின் நிலையங்கள் / புனல்மின் நிலையங்களில் பணியாற்றி வந்த ஒப்பந்த தொழிலாளர்கள் 73,600 பணி நிரந்தரம் செய்தார்கள்.

மேலும், அகவிலைப் படி, போனஸ் மற்றும் கருணைத்தொகை, பொங்கல்பரிசு என பல சலுகைகளை கொடுத்தார்கள்.

அனல்மின் நிலை யங்கள், நீர்மின் நிலையங்கள் என பல திட்டங்களை உருவாக்கி, மின்சார துறைக்கு வளமான கட்டமைப்பை உருவாக்கி, தமிழ்நாட்டிற்கு தடையில்லா மின்சாரம் வழங்கி மின்மிகை மாநிலமாக மாற்றி, நவீன தமிழகத்தை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் மின்கழக தொ.மு.ச. நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### ‘கொள்கையாக என்றும் வாழ்கிறார் கலைஞர்!’

# ‘தாய்க் கழகம்’ சார்பில் 103 ஊர்களில் பிறந்தநாள் விழா!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூன்.5-

முத்தமிழறிஞர் கலைஞரின் 103 ஆம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை வருமாறு :-

தந்தை பெரியாரின் உருவச் சிலைகளோடு ‘பெரியார் நினைவு சமத்துவபுரங்களை’ அமைத்துச் சாதனை படைத்தார்!

மறைந்தும் மறையாத நம் கலைஞரின் பிறந்தநாள் விழாவினை தாய்க்கழகம் 103 ஊர்களில், பெருமிதப் பூரிப்போடு கொண்டாடுகிறது!

‘மானமிகு சுய மரியாதைக்காரன்’ என்று தன்னை ஒரு வரியில் அடையாளப்படுத்தியநமதுமுத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது 103 ஆம் ஆண்டு பிறந்த நாள் (3.6.2026).

**பல்கலைக் கொள்கலனாகத் திகழ்ந்தவர்!**

மாணவப் பருவத்திலேயே இந்தி மொழித் திணிப்புக்கும், அதன்மூலம் (சமஸ்கிருத) ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பையும் நடத்த முயன்ற காலத்தில் (1937-1938) தனது 14 ஆவது வயதில், ‘புலி வில் கயல்’ பொறித்த கொடியைக் கையிலேந்தி,

‘‘ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்! - நீ
தேடிவந்த நாடிதல்லவே! - புறப்பட்டுப் போ!’’

என்ற பாவலர் பாலசுந்தரத்தின் பாட்டினை முழங்கியவர். தந்தை பெரியார் தம் இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டு, ஈரோட்டுக் குருகுல வாசத்தினால் பெரிதும் கொள்கைச் செதுக்கம், லட்சியத்தில் மாறாப் பற்றும் கொண்டு, பல்கலைக் கொள்கலனாகத் தம் - இடையறா உழைப்பின்மூலம் திராவிட இயக்கத் தொண்டராகி, பேரறிஞர் அண்ணாவின் பாசத் தம்பியாக அரை நூற்றாண்டு காலம் பயணித்தார். தன் குருநாதரான தந்தை பெரியாரின் கொள்கைகளைச் சட்டங்களாகவும், திட்டங்களாக வும் மாற்றி, ஒரு பெரும் சமூகப் புரட்சியை நடத்திய சரித்திர நாயகர் அவர். அவரே நமது ஒப்பற்ற, ஆற்றல்மிக்க ஆளுமை!

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரால் பாராட்டப் பெற்ற வித்தகர்!

பேச்சு, எழுத்து, நாடகம், ஆட்சி ஆளுமை, போராட்டக் களத்தில், தன்னை வார்த்தெடுத்த தலைவர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களாலேயே பாராட்டுப் பெற்ற ஒரு வியக்கத்தக்க வித்தகர் நம் கலைஞர்.

ஆரியத்தால் நம் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பிறவி இழிவான ‘சூத்திர’, ‘பஞ்சம’ பட்டங்களை ஒழித்து, இழந்த மானத்தை மீட்டெடுக்கத் தந்தை பெரியார் தனது 95 ஆம் வயதிலும் களம் காண முயன்றார். அய்யாவின் இறுதி விருப்பமான ஜாதி தீண்டாமை ஒழிப்பின் முக்கிய அம்சமாக, ‘‘ஆதிதிராவிடர் உட்பட அனைத்து ஜாதியினரும் கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட வேண்டும்’’ என்ற போராட்டம் அமைந்தது.

**நீதிமன்றங்களில் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டவர்!**

அப்போது, ‘‘அதைச் சட்டத்தின் மூலமே சாதித்துக் காட்டுவோம் அய்யா’’ என்று உறுதி அளித்து, அரை நூற்றாண்டு காலப் போராட்டத்திற்குப் பிறகு அதற்கான சட்டத்தை இயற்றி, நீதிமன்றங்களில் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டவர் நம் முதலமைச்சர் கலைஞர்!

எனினும், ‘‘முழுமையடையவில்லையே’’ என்ற ஏக்கம் தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளாக இருந்தது. பெரியார் மறைந்தபோது, அவருக்குத் தமிழ்நாடு அரசின் முழு அரசு மரியாதை வழங்க முடியாமல் போன ஆதங்கமும் நீடித்தது. இதையடுத்து வந்த ‘திராவிட மாடல்’ ஆட்சியின் ஒப்பற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் அதனைச் செயல்படுத்தி, அவ்வெற்றியை முழுமையடையச் செய்தார்.

**தந்தை பெரியாரின் உருவச் சிலைகளோடு ‘பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், நாடெங்கும் ஜாதி ஒழிப்பிற்கான முன்னெடுப்பாக - வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் - அனைத்து ஒன்றியங்களிலும் தந்தை பெரியாரின் உருவச் சிலைகளோடு ‘பெரியார் நினைவு சமத்துவபுரங்களை’ அமைத்துச் சாதனை படைத்தார்.

மூத்த மொழியான தமிழை ‘நீச பாஷை’ என்றும், சமஸ்கிருதத்தைத் ‘தேவ பாஷை’ என்றும் சொல்லி, ஜாதிப் பாகுபாட்டைப் போல நம் மொழியைத் தாழ்த்தி வைத்திருந்த ஆதிக்கத்தை உடைத்தவர் கலைஞர். தமிழ் மொழி ‘நீச பாஷை’ அல்ல, அது ஒரு ‘செம்மொழி’ என்று சட்டம் இயற்றி அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தார். அதன் பிறகே, வழக்கொழிந்த வடமொழியான சமஸ்கிருதமும் கலைஞர் போட்ட பாதையின் மூலமாக அந்தத் தகுதியைப் பெற்றது. இது சாதாரண சாதனை அல்ல!

இந்திய சமூகநீதிச் சரித்திரத்திலேயே முதன்முறையாக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கெனத் தனித்துறையையும் தனி அமைச்சகத்தையும் ஏற்படுத்தியவர்; ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூகநீதியில் ஒளிவீச்சுத் தொடரும்படி செய்தவர்.

**தாய்க்கழகத்தின் சார்பில், 103 ஊர்களில், 103 கூட்டங்கள்!**

திரைப்படங்கள், நாடகங்கள், புதினங்கள், சட்டமன்ற நடவடிக்கைகள், போராட்டக் களங்கள், சென்னை கோட்டைக்கு முன்பே, பாளையங்கோட்டை சிறைக் கோட்டத்திற்குச் சென்று, தியாகத் தழும்புகளைப் பெற்றதோடு, காங்கிரஸ் அரசால் பிரகடனப் படுத்தப்பட்ட நெருக்கடி நிலையின்போது, தி.மு.க.வை ‘‘தாய்க்கோழி, தனது குஞ்சுகளைக் காப்பதுபோல’’ காத்து, தோல்விகளால் துவண்டுவிடாமல், கொள்கைச் சிங்கமாய், ஆளுமையில் அவனியோரின் பாராட்டு மழையில் நனைந்து, மறைந்தும் மறையாத நம் கலைஞரின் பிறந்தநாள் விழாவை, தாய்க்கழகம் 103 ஊர்களில் தோழமைக் கட்சிகளோடு இணைந்து நடத்துகிறது. இன்றைய இளைய தலைமுறையினருக்குக் ‘கலைஞர் வெளிச்சம்’ பற்றி விளக்கும் நோக்கோடும், தாயின் பெருமிதப் பூரிப்போடும் இவ்விழாவைக் கொண்டாடி மகிழ்கிறோம்! கொள்கையாக என்றும் வாழ்கிறார் கலைஞர்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. இராமச்சந்திரன்
### ஜூன் 5 (2021)



தனது இளமைக் காலத்திலேயே கழகத்தில் இணைந்து கழகப் பணியாற்றியவர்.

மன்னார்குடி நகரச் செயலாளராகப் பொறுப்பு வகித்தவர்.

1989ல் சட்டமன்றத் தேர்தலில் மன்னார்குடி தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றி, மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

மாவட்ட அறங்காவலர் நியமனக்குழு துணைத் தலைவர் பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## 35 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் : 25.7.1931

மறைவு : 5.6.1991

**எஸ்.மோகன்தாஸ்**

முரசொலி மாறன் குடும்பத்தினர்

எம்.அசோகன் – அ.சுமதி
சி.கண்மணி – கே.கவிதா

மற்றும் பேரக்குழந்தைகள்



பண்ருட்டி நகர கழகம் சார்பில், கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு பண்ருட்டி நகர கழக அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக சென்று, நான்குமுனை சந்திப்பில், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் திருவுருவப் படத்திற்கு, நகர்மன்ற தலைவர்,நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில் ஆர்.எஸ்.எம்.தணிகைசெல்வம், ஆனந்தி சரவணன், ஆர்.ராஜா, ஆர்.கே.ராமலிங்கம், ஜி.கதிர்காமன், ப.குணா, எம்.எஸ்.ராம்குமார், கௌரி அன்பழகன், சசிகுமார், வழக்கறிஞர்கள் பரணிசந்தர், நாராயணன், இளைஞரணி சம்பத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.